தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி – 2021

**"எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை, இலக்கியப் படைப்புகள் தரிசித்து நிற்க வேண்டும்."**
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்-

ஈழத்தமிழினம் தன்னிறைவு கொண்ட தாயகத்தையும், தொன்மையான மொழியையும், தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலை, பண்பாடுகளையும் கொண்டிருந்த வையகத்தின் மூத்த இனம். இவற்றை எம்மிடமிருந்து பறித்து எம்மினத்தை அழிக்கின்ற கொடுமையான போரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். அத்தகைய விடுதலைப் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகங்களை என்றென்றும் போற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்ற தமிழ்ச்சிறார்களும் இளையவர்களும் தாய்மொழியினதும் தாயகத்தினதும் மாவீரர்களினதும் சிறப்புகளை அறிந்து கொள்வதற்கும், அவர்களின் பேச்சாற்றலை வளர்த்தெடுக்கவும் ஆண்டுதோறும் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி நடாத்தப்பெறுகின்றது. இப்போட்டி, நடைபெறும் காலத்தில் சுவிற்சர்லாந்து அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் நோய்த்தொற்று நடைமுறைகளுக்கு அமைவாகவே நடாத்தப்படும்.

இப்பேச்சுப்போட்டிக்கு வயதுப்பிரிவின் அடிப்படையில் விரும்பிய அனைவரும் விண்ணப்பிக்கலாம். வலய மட்டத்தில் நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டிகள் (5 – 11 வயதுப்பிரிவு) பேர்ண், சூரிச் ஆகிய நகரங்களில் நடைபெறும். 13 வயது தொடக்கம் 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்குமான பேச்சுப்போட்டிகள் நாடுதழுவிய வகையில் நடாத்தப்பெறும்.

**தரப்பட்ட பேச்சுகளில் மாற்றம் செய்தல் அல்லது வேறு பேச்சுகளைப் பேசுதல் ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது.**

21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவினர் தாமாக அல்லது தங்களுக்கு அறிமுகமானவர்களுடன் இணைந்து பேச்சினை ஆக்க வேண்டும். **(நேரம்: 7-10 நிமிடங்கள்)**

**21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவுகளுக்கான போட்டியில் பங்குபற்றுபவர்கள் தாங்கள் போட்டியில் பேசவுள்ள பேச்சினை 08.11.2021ஆம் நாளுக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.**

வலயமட்டப் போட்டிகள் **13.11.2021 சனிக்கிழமை பேர்ண், சூரிச்** நகரங்களில் நடைபெறும். 13, 15, 17, 19, 21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவினருக்கான போட்டி **14.11.2021 ஞாயிற்றுக்கிழமை பேர்ண்** நகரில் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்பெறுவதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் **27.11.2021 சனிக்கிழமை** பிறிபேர்க் நகரில் நடைபெறும் தேசிய மாவீரர்நாள் நிகழ்வில் வழங்கப்பெறும்.

பேச்சுப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்குரிய பேச்சினைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் www.trfswiss.com, www.maaveerarnal.ch ஆகிய இணையத்தளங்களிலும் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் முகநூலிலும் தமிழ்ப்பள்ளி முதல்வர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

## விண்ணப்ப முடிவு நாள்: 27.10.2021 புதன்கிழமை

போட்டிக் கட்டணம்: 15 CHF பிந்திய விண்ணப்பக் கட்டணம்: 25 CHF

மாணவர்கள் முழுமைப்படுத்தப்பெற்ற விண்ணப்பப் படிவத்தினையும் போட்டிக் கட்டணத்தினையும் வகுப்பாசிரியர் / தமிழ்ப்பள்ளி முதல்வரிடம் வழங்குதல் வேண்டும். போட்டிக்கட்டணம் செலுத்திய பத்திரத்தின் பிரதியினையும், இப்பேச்சுப்போட்டியில் முதன்முறையாகப் பங்குபற்றுபவர்கள் தங்கள் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பெறவேண்டிய முகவரி:**

Tamilar Remembrance Foundation – Swiss
Postfach 439
4528 Zuchwil.

**தபாற்கணக்கு இலக்கம்:** 60 - 34553 - 3

**தொடர்புகளுக்கு:** 076 528 71 12, 076 426 27 80

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி - 2021
## வயதுப்பிரிவும் பேச்சுகளின் தலைப்புகளும்

| வயதுப்பிரிவு | பேச்சுகளின் தலைப்புகள் |
|---|---|
| 5 வயதுப் பிரிவு<br>(01.01.2016 - 31.12.2016 வரையில் பிறந்தோர்) | நல்லொழுக்கம் |
| 6 வயதுப் பிரிவு<br>(01.01.2015 - 31.12.2015 வரையில் பிறந்தோர்) | தமிழ் என் தாய்மொழி |
| 7 வயதுப் பிரிவு<br>(01.01.2014 - 31.12.2014 வரையில் பிறந்தோர்) | காந்தள் மலர் |
| 8 வயதுப் பிரிவு<br>(01.01.2013 - 31.12.2013 வரையில் பிறந்தோர்) | அச்சம் தவிர் |
| 9 வயதுப் பிரிவு<br>(01.01.2012 - 31.12.2012 வரையில் பிறந்தோர்) | நடுகல் நாயகர்கள் |
| 10 வயதுப் பிரிவு<br>(01.01.2011 - 31.12.2011 வரையில் பிறந்தோர்) | ஈகைப்பேரொளிகள் |
| 11 வயதுப் பிரிவு<br>(01.01.2010 - 31.12.2010 வரையில் பிறந்தோர்) | பேராற்றல் மிகு தலைவர் மாமா |
| 13 வயதுப் பிரிவு<br>(01.01.2008 - 31.12.2009 வரையில் பிறந்தோர்) | வானுயரும் மாவீரம் |
| 15 வயதுப் பிரிவு<br>(01.01.2006 - 31.12.2007 வரையில் பிறந்தோர்) | தாயகத்தின் பொருண்மியம் |
| 17 வயதுப் பிரிவு<br>(01.01.2004 - 31.12.2005 வரையில் பிறந்தோர்) | யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பு ஓர் இன அழிப்பு |
| 19 வயதுப் பிரிவு<br>(01.01.2002 - 31.12.2003 வரையில் பிறந்தோர்) | தமிழீழம் எங்கள் தாயகம் |
| 21 வயதுப் பிரிவு<br>(01.01.2000 - 31.12.2001 வரையில் பிறந்தோர்) | வேர்களைத் தாங்கிட விழுதுகளாய் நிமிர்வோம் |
| 22 வயதும் அதற்கு மேலும்<br>(31.12.1999ஆம் நாளும் அதற்கு முன்பும் பிறந்தோர்) | தமிழர் என்பதில் பெருமை கொள்வோம் |